# முரசொலி

பக்கங்கள் நான்கு

விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 199 ஆங்கிரச வைகாசி 31 (13.06 1992) சனி


## வீடுபார்க்கச் சென்ற இருவரை காணவில்லை

நேற்றுக் காலை கரும்பனை பகுதிக்கு வீடு பார்க்கச் சென்ற இருவர் நேற்று மாலை வரை வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் ஒருவர் குமாரசாமி என்பவர் என உறவினர்கள் தெரிவித்தனர். இதே சமயம் நேற்று முன்தினம் வலிவடக்கில் இடம்பெற்ற மோதல்களின் போது கொல்லன் கலட்டியில் பெரியவிடை எனும் பகுதியில் தனது வீட்டில் தங்கியிருந்த காசிப்பிள்ளை என்பர் குறித்தும் எதுவித தகவலும் கிடைக்கவில்லை, இவரது உறவினர்கள் வீடுகளை விட்டுவெளியேறியபோதும் இவர் வீட்டில் தங்கியிருந்ததாக கூறப்படுகிறது. 22

# நேற்று மாலையிலும் படையினர் இளவாலை நோக்கி ஷெல்தாக்குதல்

## கடலில் இருந்தும் பீரங்கி வேட்டு

வலிகாமம் வடக்கில் சேந்தான்குளம் பகுதியிலிருந்து நேற்று மாலை ஷெல் தாக்குதல்கள் இடம் பெற்றன. இதேசமயம் கீரிமலை சேந்தான்குளம் கடற்பகுதியில் தரித்து நிற்கும் கடற்படை பீரங்கிப் படகுகளும் தாக்குதல்களை இடையிடையே நடத்தின.

படையினரால் ஏவப்பட்ட ஷெல்கள் பன்னாலை, இளவாலை, மாரீசன் கூடல், சித்திரமேழி, பத்தாவத்தை பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

மாலையில் இடம்பெற்ற இந்த ஷெல் தாக்குதலில் இளவாலை, பன்னாலைப் பகுதிகளில் 3 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக தெரிய வருகிறது. 07, 22

## விழிசிட்டியில் வீழ்ந்த ஷெல்லில் ஒரே குடும்பத்தில் மூவர் படுகாயம்

நேற்றுக்காலை 9 மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து படையினர் தெல்லிப்பழை விழிசிட்டியை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

விழிசிட்டியிலுள்ள பிராமணக் குருக்கள் தங்கள் வீட்டிலுள்ள பொருட்களை அப்புறப்படுத்திக் கொண்டிருக்கையில் திடீரென வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் இளம் குடும்பப்பெண் உட்பட மூவர் படுகாயமடைந்து யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிவபாதகுருதையர் சிவயோகீஸ்வரக் குருக்கள். 81

திருமதி குணஜானகி சிவயோகீஸ்வரக் குருக்கள் (25 வயது) சிவபாதகுருதையர் மூர்த்திக்குருக்கள் (33 வயது) ஆகியோராவர்.

இரு வீடுகளும் சேதமாகின இரு ஷெல்கள் அப்பகுதியில் வீழ்ந்து வெடித்தன. 07, 22

## கைதான இடத்திலேயே இளைஞன் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு போரதீவில் மூன்று பொதுமக்களை கைது செய்த படையினர் இவர்களில் ஒருவரை அவ்விடத்தில் வைத்துசுட்டுக்கொன்றுவிட்டு ஏனைய இருவரையும் மூரா மிற்கு இழுத்துச் சென்றனர்.

கடந்த 9 ஆம் திகதி நடைபெற்ற இச்சம்பவத்தில் கி. கருணாகரன் (20) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

## சகோதரனை தேடிச் சென்றவர் சினைப்பர் தாக்கிற்கு இலக்கு

நேற்று பிற்பகல் 2 மணியளவில் கீரிமலை சேந்தான்குளப் பகுதியில் தமது சகோதரனைத் தேடிபோன ஒருவர் அப்பகுதியில் படையினர்மேற்கொண்ட சினைப்பர்த் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் நேற்று யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாணிக்கம் சந்திரன் (45 வயது வசந்தபுரம், இளவாலை) என்பவரே சினைப்பர்த்தாக்குதலுக்கு இலக்காகியவராவர் 07

## வீரச்சாவு

சேந்தான்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினருடனான மோதலில் காயமடைந்திருந்த கருணாகரன் (த மகேசன் கொக்குவில்) தமிழவேந்தன் (மு. உஷாந்தன் சேப்பாய்) ஆகிய இரு போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

மட்டக்களப்பில் காணாமலி பகுதியில் கடந்த 7 ஆம் திகதி படையினர் மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் கருணானந்தம் (மு. குருநாதன் ஆயித்தியமலை), பிரணவகுமார் (பா. ரவீந்திரன் நற்பிட்டிமுனை) ஆகிய இரு போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

கடந்த புதனன்றும் மட்டக்களப்பு சரவெட்டி பகுதியில் பதுங்கியிருந்த படையினர் நடத்திய தாக்குதலில் 2 ஆம் லெப் தமிழீழன் (சி பிரான்ஸில் மட்டக்களப்பு) வீரச்சாவு ஏய்தினார்.

## பீரங்கித் தாக்கு

சேந்தான்குளம் கடற்பகுதியில் தரித்து நின்ற கடற்படை படகில் இருந்து நேற்று அதிகாலை வேளை படையினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. 47

## கலிபர் தாக்குதல்

பூநகரி கல்முனை இராணுவத்தினர் நேற்று அதிகாலை வேளையில் அரியாலைகிழக்கு, தெற்கு கடற்கரையோர பகுதிகளை நோக்கி கலிபர் தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. 47

## மன்னாரில் வீரச்சாவு

மன்னாரில் கடந்த 7 ஆம் திகதி சிறுநாவற்குளம் இராணுவ முகாம் எல்லையினுள் புகநேரிட்ட போது ஏற்பட்ட மோதலில் 4 பெண் போராளிகள் வீரச்சாவு ஏய்தினர்.

மேஜர் பாரதி (வி. சத்தியபாமா, காவெட்டி), சுரதா (பி. சுகந்தா, நெல்லியடி), கப்டன் குவேனி (இ நகுலேஸ்வரி, மன்னார்), 2 ஆம் லெப். கங்கனி (பா. பானுமதி, காரைநகர்) ஆகிய பெண் போராளிகளே வீரச்சாவு அடைந்தவர்களாவர். 07

## இளைஞர் காயம்

சேந்தான்குளம் பகுதியில் வீட்டில் நின்றவர் மீது படையினர் மேற் கொண்ட துப்பாக்கிச் சூட்டினால் நேற்றுப் பிற்பகல் ஒரு இளைஞன் படு காயமடைந்துள்ளார்.

இளவாலை சித்திப்பற்றலடியைச் சேர்ந்த துரைசிங்கம் ஞானச் செல்வன் (30 வயது) என்பவரே காயத்திற்குள்ளானவர் இவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவராவர் 07

## ஹெலி தாக்குதல்

நேற்றுக் காலை விளான் சிறுவிளான் பகுதிகளில் ஹெலி சரமாரிக துப்பாக்கிப் பிரயோகம் செய்தது இதனால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து தெரியவில்லை. 22

## தீவுக்கு செல்லத் தடை

படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள யாழ் மாவட்டத் தீவுப்பகுதிகளுக்கும் செய்தியாளர்கள் தற்போது செல்ல கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக பி.பி.ஸி. கொழும்பு செய்தியாளர் இயாகானுவோல் தெரிவித்தார்.

## சில்லாலையில் அஞ்சலி

நேற்று முன்தினம் வலி வடக்கில் இடம் பெற்ற மோதலில் வீரமரணமடைந்த சில்லாலையைச் சேர்ந்த தயானன் (அரசப்பாவின்) பூதவுடல் நேற்று மாலை சில்லாலையில் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டது. 22

## மாதகல் கடற்பகுதியிலிருந்து கடற்படை பீரங்கித் தாக்குதல்

நேற்று மாலை 5-30 மணியளவில் மாதகல் கடற்பிராந்தியத்திலிருந்து பொது மக்கள் குடியிருப்புக்களை நோக்கி கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இவை மாரீசன்கூடல், சித்திரமேழி, பத்தாவத்தை பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. 22

## வலிமேற்கு பகுதியில் வழமையான நிலை

யாழ் மாவட்டத்தில் நேற்றைய தினம் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டிருந்தபோதும் வலிமேற்குப் பிரிவில் உள்ள சந்தைகள், வர்த்தக நிலையங்கள், பொது ஸ்தாபனங்கள் வழமைபோல இயங்கின இப்பிரிவில் உள்ள சந்தைகள் வழமைபோல அதிகாலையில் கூடின.

இங்குள்ள கடைகளும் உணவுச் சாலைகளும் திறந்திருந்தன (18)

## அளவெட்டியில் ஹெலி சூடு மாணவன் காயம்

அளவெட்டிபகுதியைநேற்றுக் காலை வட்டமிட்ட ஹெலிகப்டர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு மாணவன் படுகாயமடைந்த நிலையில் நேற்று யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கனகரட்ணம் பாலச்சந்திரன் (14) தெல்லிப்பழை கிழக்கு என்பவரே துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகியவராவார்

## வலி வடக்குப் பகுதி வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைந்தது

வலிவடக்குப் பகுதி நேற்று மயான பூமியாகக் காட்சியளித்தது வீதிகளில் மக்கள் நடமாட்டம் மிகக் குறைவாகவே காணப்பட்டது அத்துடன் கடைகள் தேநீர்ச்சாலைகள் என்பன பூட்டப்பட்டிருந்தன

சுன்னாகம், மல்லாகம் போன்ற பகுதிகளில் மக்களின் நடமாட்டம் குறைவாக இருந்தபோதிலும் வீடுகளை விட்டு வெளியேறிய மக்கள் தமது குடிமனைகளைச் சென்று பார்வையிட்டு திரும்பியதைக் காணமுடிந்தது. (47)

## செஞ்சிலுவை குழுவினரின் தீவுப்பகுதி பயணம் ஒத்திவைப்பு

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினர் தீவுப்பகுதிக்கு செல்வதை மறு அறிவித்தல் வரை ஒத்திவைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இங்கிருந்து நோயாளர்களையும் மற்றும் பொதுமக்களையும் தீவுப்பகுதிக்கு கொண்டு செல்வதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கினர் என்றும் தற்போதைய சூழ்நிலையில் தீவுப்பகுதிக்கு சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினர் செல்வதை ஒத்திவைத்திருப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. 47

# ஒலிம்பிக் குழுவிலும் தீபிகாவுக்கு இடமில்லை!

ஸ்பெயினின் பார்செலோனா நகரில் யூலை 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 25 ஆவது ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ள 10 பேரை இலங்கை ஒலிம்பிக் குழு தெரிவு செய்துள்ளது.

அந்தப் பட்டியலில் கடந்த 'சாவ்' போட்டியில் கடுதலான தங்கப் பதக்கங்களை இலங்கைக்கும் பெற்றுக் கொடுத்தவரும், இப்போட்டியில் சிறந்த வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டவருமான செல்வி தீபிகாவின் பெயர் இடம் பெறவில்லை. ஆனால் நீச்சல் வீரர் யூலியன் போலின் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

ஆரம்பத்தில் இலங்கை ஒலிம்பிக் குழுவினால் தயாரிக்கப்பட்ட பட்டியலில் 'தீபிகா' 'யூலியன்' ஆகிய இருவரின் பெயர்களும் இடம் பெறவில்லை இது தொடர்பாக பொதுஸ் தாபனங்களும் பத்திரிகைகளும் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக இவர்கள் இருவரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று விளையாட்டுத் துறை அமைச்சினால் உறுதி அளிக்கப்பட்டது. ஆனால் தீபிகா மீண்டும் தவிர்க்கப்பட்டுள்ளார். (16)

# கோப்பாய் ஆசிரிய கலாசாலை விளையாட்டுப் போட்டிகள்

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் 1992ஆம் ஆண்டிற்கான விளையாட்டுப் போட்டிகள் நேற்றுமுன்தினம் கலாசாலையில் உடற்கல்வி விரிவுரையாளர் திரு. கே. மதுசூலின் தலைமையில் ஆரம்பமாகியுள்ளன.

இப் போட்டிகளின் ஓர் அம்சமாக ஆண்களின் காபந்தாட்டமும் பெண்களின் வலைப்பந்தாட்டமும் ஆரம்ப நாளன்று இடம் பெற்றன.

கலாசாலை அதிபர் திரு. வி. கே. சிவப்பிரகாசம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நிகழ்ச்சிகளை சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைத்தார். (16)

# தனியார் ஒளிபரப்பு நிலையங்களுக்கு இனி அனுமதி இல்லை!

இனிமேல் புதிய தனியார் தொலைக்காட்சி நிலையங்கள் எதற்கும் அனுமதி வழங்குவதில்லை என அரசு முடிவெடுத்துள்ளது.

வெளிநாட்டு முதலீடு பற்றிய அமைச்சரவை உபகமிட்டி எடுத்தமுடிவைத்தொடர்ந்தே புதிய தொலைக்காட்சி நிலையம் எதுவும் அமைப்பதற்கு அங்கீகாரம் இல்லை வேனப் பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

# விளையாட்டுத் துறைக்கு ரஷ்யாவில் அதிக முக்கியத்துவம்

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் உலக நாடுகளில் விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நாடும் அதிக அளவில் பணம் செலவிடும் நாடும் ரஷ்யாதான் என்று தெரியவந்துள்ளது.

ரஷ்யாவில் 3,814 விளையாட்டு அரங்குகளும் ;1,02, 1000 கால்பந்தாட்ட மைதானங்களும், 2,495 நீச்சல் குளங்களும் உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. 16

# வவுனியா நகருக்கு தொலைபேசி, ரெலெக்ஸ் வசதி!

வவுனியாவில் தொலைத் தொடர்பு வசதிகள் துரித விருத்தி செய்யப்படுவதாகத் தபால் தொலைத் தொடர்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

"வவுனியாவுக்கு உடனடி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தொலைபேசி, ரெலெக்ஸ் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன".

"ரேடியோத் தொடர்புகள் மூலம் வவுனியா, அனுராதபுரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. வவுனியா புகையிரத நிலையத்தில் பொது அழைப்புப் பெட்டியொன்றும் அமைக்கப்பட்டுள்ளது வவுனியா தபால் நிலையத்திற்கு ஏற்கனவே "ரெலெக்ஸ்" வசதி வழங்கப்பட்டுள்ளது"

"வவுனியா தன்னியக்கப் பரிவர்த்தனை நிலையம் புனரமைக்கப்படுகிறது அங்குள்ள 50 சந்தாதாரர்களுக்குத் தொலைபேசி வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன" என இது குறித்துத் தொலைத் தொடர்புத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## சிறு விளம்பரம்

### ஜோதிடம்

திராத கடன் தொல்லை, தொழில் நட்டம், கல்விக் குழப்பம், விவாகம் நடவாமை, சாப தோஷங்கள் நீங்கி அதிர்ஷ்டத்துடன் வாழ ஜாதகத்துடன் நேரில் வரவும் அதிர்ஷ்டம் அழைக்கிறது. சாந்தி பரிகாரங்கள் கூறுவதுடன் யந்திரங்களும்வழங்கு கிறோம் ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 96, கோவில் வீதி, நல்லூர். (ஸ்ரீ கைலாச பிள்ளையார் கோவிலடி) (06037)

### சோதிடம்

எம்மிடம் தந்த யந்திரங்கள், சாதகங்கள் எழுதி முடிந்தது விரைவில் பெற்றுக் கொள்ளவும். ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 96 கோவில் வீதி (ஸ்ரீ கைலாச பிள்ளையார் கோவிலடி) நல்லூர். 06035


## வெற்றி பெற்றது

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றுவருகின்றன.

இப் போட்டிகளின் தொடரில் இடம் பெற்ற கரபந்தாட்டப் போட்டியில் நல்லூர் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 15: 9, 15: 12 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோற்கடித்தது. 16

# ★ பிக்குகளின் எதிர்ப்பினால் கைவிடப்பட்ட நன்னீர் மீன்வளர்ப்பை மீண்டும் ஆரம்பிக்க அரசு ஆலோசனை

தென்பகுதியில் நிறுத்தப்பட்டுள்ள நன்னீர் மீன் வளர்ப்பை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து அரசு ஆலோசனை செய்து வருவதாகத் தகவலொன்று தெரிவிக்கிறது.

மீன்களை வளர்த்து அவற்றை உணவிற்காகப் பெறும் நன்னீர் மீன்வளர்ப்புத் திட்டத்தை பௌத்த குருமார்கள் எதிர்த்ததையடுத்து, வெளிநாட்டு உதவிகளுடன் பல கோடிரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டிருந்த பல நன்னீர் மீன்வளர்ப்புத்திட்டங்களை அரசு தெற்கில் சில மாதங்களுக்கு முன்னர் கைவிட்டிருந்தது தெரிந்ததே. மீன்களை உணவிற்காகக் கொல்லும் இந்த நடைமுறை ஒரு 'உயிர்க் கொலை' யென பௌத்த குருமார்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய கடற்றொழில் அமைச்சர் கலபதி நன்னீர் மீன்வளர்ப்பை மீண்டும் ஆரம்பிக்க ஆலோசிக்கப்பட்டுள்ளதாகவும், இது குறித்து பௌத்த குருமாரிடையே மனமாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

## தமிழைப் பாதுகாப்பது சமுதாயத்தின் கடமை

### -அமைச்சர் ஹமீத்

'தமிழைப் பாதுகாப்பது சமுதாயத்தின்கடமையாகும்' இவ்வாறு மத்திய மாகாண கல்வித் திணைக்களம் கண்டியில் நடத்திய தமிழ் மொழி தின விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் ஹமீத் தெரிவித்தார்.

காலத்தால் அழியாத காவியங்களையும் இலக்கியங்களையும் தந்த மொழி தமிழ் இம் மொழி மிகத் தொன்மையானது. சிங்கப்பூர், இந்தியா, மலேசியா போன்ற நாடுகளில் வாழும் பெரும் எண்ணிக்கையான மக்கள் பேசும் மொழியாகத் தமிழ் விளங்குகிறது. எனவே இம் மொழியைப் பாதுகாப்பது சமுதாயத்தின் கடமையாகு மெனவும் அவர் தெரிவித்தார்.

# வங்காலை, அடம்பனுக்கு குடிநீர்த்திட்டம் விஸ்தரிப்பு!

மன்னார் மாவட்டத்தில் இடை நிறுத்தப்பட்ட ரெதர்லாந்து அரசின் உதவியுடனான குடிநீர்த் திட்டத்தை வங்காலை, அடம்பனுக்கு விரிவுபடுத்த தற்போது நடவடிக்கையெடுக்கப்பட்டு வருவதாக செய்தியொன்று தெரிவிக்கிறது.

முருங்கனிலிருந்து இந்த குடிநீர்த் திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ளது. இது குறித்து நேரடியாக மதிப்பீடு செய்வதற்கென நெதர்லாந்திலிருந்து அதிகாரிகள் தற்போது மன்னார் வந்துள்ளனர்.

# கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள தென்பகுதியினருக்கு நிதியுதவி!

மட்டக்களப்பு, வாழைச்சேனைப் பகுதியில் உள்ள சேதமாக்கப்பட்ட 'ஐஸ்' தொழிற்சாலையை உடனடியாகத் திருத்தியமைக்குமாறு கடற்றொழில் அமைச்சர் கலபதி உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் மட்டக்களப்புப் பகுதியில் கரைவலைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நிதியுதவியும் பாதுகாப்பும்வழங்குமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய நிதி இதற்குப் பயன்படுத்தப்படும்.

அமைச்சர் கலபதி கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்புக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

மட்டக்களப்பு, வாழைச்சேனைப் பகுதிகளில் உள்ள குறித்த சேதமான பனிக்கட்டித் தொழிற்சாலைகள் பெரும்பான்மை இனத்தவருக்கே சொந்தமானவை யென்றும், அப்பகுதியில் கரைவலைத் தொழிலில் தென்பகுதியைச் சேர்ந்தோரும் ஈடுபட்டுள்ளனர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

# 6 கோடி ரூபா செலவில் கலாசாலைக்கு புதிய கட்டிடம்

வவுனியாவில் அமைக்கப்படவுள்ள ஆசிரிய கலாசாலைக்கான அடிக்கல் நேற்று நாட்டப்பட்டது.

வவுனியா பூந்தோட்டத்தில் 50 ஏக்கர் காணியில் இந்த கட்டிடம் அமைக்கப்படவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி இதற்கென 6 கோடி ரூபா நிதியை வழங்கியுள்ளது.

# அஸாம் இயக்கத்திற்கு எதிரான நடவடிக்கை நிறுத்தம் நீடிப்பு

அஸாமின் வடக்கு மாவட்டங்களில் அல்பா கிளர்ச்சிக் குழுவிற்கு எதிரான இராணுவ நடவடிக்கை நிறுத்தத்தை இந்திய அரசு மேலும் 15 நாட்களுக்கு நீடித்துள்ளது.

அல்பா இயக்கத்தின் துணைத்தலைவர் அஸாம் மாநில அரசின் விடுத்த கோரிக்கைக்கு ஏற்ப இந்த யுத்த நிறுத்த நீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இன்று பாஷையூரில்

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் திருச் சுருபத் தேர்ப்பவனி இன்று காலை நடைபெறும்.

முதலாம் திருப்பலி காலை 5 00 மணிக்கும், இரண்டாம் திருப்பலி காலை 5. 45 மணிக்கும், ஆயரின் திருநாள் கூட்டுத் திருப்பலி காலை 6 30 மணிக்கும் அதனைத் தொடர்ந்து அந்தோனியாரின் திருச்சுருப தேர்ப்பவனி ஆலய முன்றலில் நடைபெறும்.

புனிதரின் திருச்சுருப ஆசியுடன் திருவிழா நிறைவெய்தும். (47)

## நிருவாகத்திற்கு அரசு பணிப்பு

25 நாள் வேலை அல்லது அதற்குரிய சம்பளம் சகல தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்படவேண்டுமென அரசு தோட்ட நிருவாகங்களைப் பணித்துள்ளது.

குறிப்பிட்ட தொழிலாளி 25 நாட்களுக்குக் குறைவான நாள்களுக்கே வேலைக்குச் சமுகமளித்திருந்தால் மேலதிகமாக வழங்கப்பட்டிருந்த கொடுப்பனவுகள் அடுத்த 10 மாதங்களுக்குள் மீள அறவிடப்பட வேண்டுமெனவும், அதனை ஒரே மாதத்தில் அறவிடமுடியாது எனவும் பணிக்கப்பட்டுள்ளது.

## ஆண்டுப் பொதுக் கூட்டம்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் ஆண்டுப் பொதுக் கூட்டம் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 2 மணிக்கு வைத்தியசாலைக் கலூரி மண்டபத்தில் நடைபெறும்.

உறுப்பினர்கள் அனைவரும் இதில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## துரிதப்படுத்த நடவடிக்கை

இளைப்பாறியவர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகளையும், இறந்த ஊழியர்கள் ஆசிரியர்களின் மரணப்பணிக் கொடைகளையும் வழங்க நடவடிக்கையைத் துரிதமாக மேற்கொள்ளுமாறு வடஇழக்கு மாகாணசபையின் அமைச்சு சகல கோட்டங்களுக்குப்பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளர்களையும் பணித்துள்ளது. 15

## ஊமையாக நடித்து பலரை ஏமாற்றியவர் கைது!

ஊமையாக நடித்து பணம் வசூல் செய்து வந்த நபர் ஒருவரை மாத்தளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தான் ஒரு வைத்திய பீட மாணவன் என்றும் எதிர்பாராத நடவடிக்கையின்போது தாக்கப்பட்டமையினால் ஊமையாகி விட்டதாகக் கூறி மேற்படி நபர் பண வசூல் செய்து வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் பல்வேறு நகரங்களுக்கும் சென்று பாடசாலைகள், அரச திணைக்களங்கள், அதிகாரிகள் உட்பட பல்வேறு தரப்பட்டோரையும் இவர் இவ்வாறு கூறி ஏமாற்றி பண வசூல் செய்துள்ளாராம்.

## மரம் நடுகைக்காக உதவும் அரச சார்பற்ற நிறுவனங்கள்

யாழ். மாவட்டத்தில் மர நடுகைக்கு சில அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

மரநடுகை சம்பந்தமாக நேற்று செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த உறுதி மொழி வழங்கப்பட்டது

இவ்வாண்டு மரநடுகைக்காக இறுவர் பாதுகாப்புநிதியம் மரமுந்திரிகை வகைகளையும் போரூட் மரநடுகைக்கானகுள நிர்மாணத்துக்கும் உதவ முன்வந்தன.

தென்னிந்திய திருச்சபை 1000 பழ மரவகைகளையும், யாழ் மாநகரசபை 500 மரக் கன்றுகளையும் வீதியோரங்களில் நாட்ட முன்வந்துள்ளன,

இம்மரநடுகைக்காக உதவி அரச அதிபர் பிரிவுகளில் மரம் நடுகை திட்டமுறையை அமைப்பதற்கு நேற்றையகூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது 47

## உடற்பயிற்சி உதவி ஆசிரியர்கள் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

250 விளையாட்டு, உடற் பயிற்சி உதவி ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர் தமிழ் மொழி மூல பாடத்திற்கான விண்ணப்பமும் தற்போது கோரப்பட்டுள்ளது.

18 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்ட சாதாரண பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தெரிவு செய்யப்படுபவர்கள் 3 மாத பயிற்சியின் பின்னர் எழுத்து மற்றும் செய்முறை பரீட்சையின் பின் நியமனம் வழங்கப்படும்'

விண்ணப்ப இறுதி திகதி இம்மாதம் 26 ஆம் திகதியாகும் இம்மாதம் 5 ஆம் திகதி வெளியான வர்த்தமானியில் இது குறித்து பிரசுரமாகியுள்ளது.

## மண்ணெண்ணெய் முத்திரை வழங்க ஏற்பாடு

யாழ். மாவட்டத்தில் வறுமை நிவாரண உணவு முத்திரை பெறுபவர்களுக்கு மண்ணெண்ணெய் முத்திரைகள் மிக விரைவில் வழங்கப்படுமென யாழ். செயலக சமூக சேவைகள் திணைக்கள வட்டாரம் தெரிவித்தது,

இதற்கான நடவடிக்கைகள் பிரதேச செயலகங்கள் மூலமாக மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது 47

## இரு போராளிகளுக்கு கொக்குவிலில் அஞ்சலி

வலி வடக்குப் பகுதியில் நேற்று முன்தினம் படையினரால் மேற்கொள்ளப்பட்ட பாரிய இராணுவத் தாக்குதல்களை எதிர்த்து போராடி வீரச்சாவு அடைந்த இரு போராளிகளினுடைய புகழுடம்புகள் நேற்று மாலை 4.45 மணியளவில் கொக்குவில் பிரம்படி ஒழுங்கை சன சமூக நிலையத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது

வீரவேங்கை வழுதி (விக்கிரமசிங்கம் -ஷலோநந்தராசா அம்பாறை) வீரவேங்கை இளையவன் (வைசபை குணராசா மண்டூர்) ஆகியோரின் புகழுடம்புகளே விசேட மேடையில் வைக்கப்பட்டிருந்தது.

ஏராளமான மக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர் விடுதலைப் புலிகள் முக்கியமானவர்களின் உரையைத் தொடர்ந்து புகழுடம்புகள் இராணுவ மரியாதையுடனும் பான்ட் வாத்திய இசையுடனும் கோப்பாய் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. 07

## தென் மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்டம் காண்கிறது?

அண்மையில் இந்தியாவில் இடம்பெற்ற இடைத் தேர்தல்களில் தென்மாநிலங்களின் முடிவுகள் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு பலத்த அடியாக அமைந்துள்ளது

கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களின் சில தொகுதிகளில் காங்கிரஸ் மண்கவ்வியுள்ளது. இதனால் ஆத்திரமடைந்த காங்கிரஸ் கட்சியினரின் ஒரு பிரிவினர் தோல்விகளுக்கு காரணம் இம்மாநிலங்களின் முதலமைச்சர்களே எனக் குற்றஞ்சாட்டியுள்ளனர். இவர்களை மாற்ற வேண்டும் எனக் கோரும் இவர்கள் இதற்காக சில இரகசிய நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளனராம்

## அமைச்சருக்கு கறுப்புக் கொடி பாட்டாளி மக்கள் கட்சி சிலர் கைது

மத்திய அமைச்சர் அர்ஜுன் சிங் இன்று தமிழகம் வருவதை யொட்டி அவருக்கு கறுப்புக் கொடி காட்ட திட்டமிட்டிருந்த பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை எம். ஜி. ஆர். மாவட்டத்திலேயே மேற்படி கைது செய்யும் சம்பவங்கள் இடம்பெற்றன.

புலிகள் இயக்கத்தை இந்தியா தடைசெய்ததை ஆட்சேபித்து தமிழகம் வரும் எந்த மத்திய அமைச்சருக்கும் கறுப்புக் கொடி காட்டுவோம் என பாட்டாளி மக்கள் கட்சி கூறியிருந்தது தெரிந்ததே.

## 120 ஆலைகளுக்கு அங்கீகாரம்

ஜனாதிபதி பிரேமதாசாவின் 200 ஆடைதயாரிக்கும் தொழிற்சாலை நிர்மாணத் திட்டத்தில் கொழும்பு பெரும்பாக அபிவிருத்தி ஆணைக்குழு இதுவரை 120 ஆலைகள் அமைப்பதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

## "எமக்காக பூமியை காப்பாற்றுக"
## சூழல் மாநாட்டில் சிறுவனின் உரை

எமக்காக இந்த பூமியைக் காப்பாற்றுங்கள் ஏனெனில் உங்களுக்குப் பின்பாக இதில் உங்கள் குழந்தைகளான நாமே வசிக்கப்போகின்றோம். இப்படியான உருக்கமான உரையொன்றை பிரெஞ் சிறுவன் ஒருவன் பிறேசிலில் நடைபெற்றுவரும் உலகச் சூழல் மாநாட்டில் நிகழ்த்தினான்

பிரெஞ், கனடா மற்றும் சிலி நாட்டைச்சேர்ந்த மூன்று சிறுவ சிறுமிகள் மாநாட்டின் பிரதம அதிதிகளாக அழைக்கப்பட்டனர்.

இவர்கள் மாநாட்டில் கலந்து கொண்ட உலக நாடுகளின் பிரதிநிதிகள் முன் நிகழ்த்திய உரை உருக்கம் நிறைந்ததாகவும் பலரின் வரவேற்பைப் பெற்றதாகவும் இருந்தது.

கனடாவைச் சேர்ந்த சிறுமி மாநாட்டில் உரை நிகழ்த்திய போது, நான் வீட்டைவிட்டு வெளியேற அஞ்சுகிறேன் வளிமண்டல ஓசோன் படையில் ஏற்பட்ட சேதத்தினால் சூரியக் கதிர்களால் எனக்குப் பாதிப்பு ஏற்பட்டு விடுமோ என அஞ்சுகிறேன். காற்றை சுவாசிக்க அஞ்சுகிறேன் ஏனெனில் காற்றிலுள்ள நஞ்சுகளினால் எனக்கும் என்னைப்போன்ற சிறுவர்களுக்கும் பாதிப்பு ஏற்படலாம் எனக் கருதுகிறேன் என்றாள்.

இதனிடையே இன்று ஆரம்பிக்கும் 110 நாடுகளின் தலைவர்கள் பங்குபற்றும் உச்சி மாநாடு பல எதிர்ப்புகளையும் தோற்றுவித்துள்ளது,

பல நாடுகளினதும் தலைவர்கள் பிறேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் கூடவதால் நகரின் பாதுகாப்பும் கடுமையாக்கப்பட்டுள்ளது.

பிரதான வீதிகள் மூடப்பட்டு முக்கிய இடங்களில் பிறேசிலிய இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளது மாநாடு நடைபெறும் கட்டிடங்களைச் சூழவும் ஆயுதம் ஏந்திய நிலையில் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர் இப்பகுதியில் உள்ள உயரமான கட்டிடங்களின் மேலும் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் சூழல் பாதுகாப்பிற்கென 4 மில்லியன் டொலரை தாம் ஒதுக்கியுள்ளதாக ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் அறிவித்துள்ளன

சர்ச்சைக்குரியவரும் மாநாட்டில் தற்போது தனித்துவிடப்பட்ட நிலையில் உள்ள அமெரிக்க ஜனாதிபதி மாநாட்டில் உரை நிகழ்த்தவுள்ளார் இவரின் உரை கடும் கண்டனத்திற்குள்ளாகும் எனக் கூறப்படுகிறது,

## பரீட்சை மண்டபங்களில் பரீட்சார்த்திகள் தங்கியிருக்கவும்

இராசு சேவை அலுவலர் பரீட்சைக்கான வினாத்தாள்கள் நேற்று பிற்பகல் 4.00 மணிவரை கல்வித்திணைக்களத்திற்கு வந்து சேராதபடியால் இருந்தது அறிவுறுத்தும்படி பரீட்சை ஆணையாளரை யாழ். கல்விப்பணிப்பாளர் வேண்டியுள்ளார்,

வினாத்தாள்கள் இன்று காலையில் வந்து சேருமாயின் பரீட்சை தாமதித்தே ஆரம்பிக்கும் எனவும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபங்களில் தங்கி இருக்கும்படியும் யாழ். கல்விப்பணிப்பாளர் கோரியுள்ளார்.

## வடதமிழீழ வளங்கள் பற்றிய புள்ளிவிவர தகவல் கை நூல்

"உணவுத் தேவைகளும் உற்பத்தி இலக்குகளும்' என்ற புள்ளிவிவர தகவல் கைநூல் ஒன்று தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. இதில், வட தமிழீழத்தில் பிரதான உணவு உற்பத்தி நிலப்பரப்பு. வருடாந்த உணவு உற்பத்தி, வட தமிழீழ மக்களுக்கான ஒரு வருட உணவுத்தேவை, ஒரு வருட நுகர்ச்சிக்குத்தேவையான கால்நடைகளின் எண்ணிக்கை, வட தமிழீழத்தின் கால்நடை வளம் மீன் உற்பத்தி, பனையின் பயன்பாடு போன்ற பொருளாதார புள்ளி விபர தகவல்களும் மற்றும் உணவு, அது நுகர்வு பற்றிய விஞ்ஞான ரீதியான தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வட தமிழீழத்தின் வளங்களும், தேவைகளும், தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அடையவேண்டிய உற்பத்தி இலக்குகளும், தகவல் ரீதியாக இக் கைநூலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. மேலும் தமிழீழத்தில் சுயசார்பு பொருளாதாரத்தினை உருவாக்குவதற்கான வளங்கள் உண்டு என்பதனை வெளிக்காட்டுவதாக இக் கைநூலில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் அமைந்துள்ளன.

## பாதிப்புற்றோர் விவரம் சேகரிப்பு

பயங்கரவாத நடவடிக்கையின் போது உயிரிழந்த உத்தியோகத்தர்கள். ஆசிரியர்களின் முழு விபரங்களையும் ஒவ்வொரு மாதமும் தமக்கு உடன் அனுப்பி வைக்குமாறு வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சு சகல கோட்டங்களுக்கும் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும் கோரியுள்ளது.(15)

## யானையைக் கொன்றாராம் வெள்ளையர் மீது அரசு பாய்ச்சல்

தென்னிலங்கையில் யானைகள் குறித்து ஆய்வுகளை மேற்கொண்டுவந்த பிரிட்டிஷ் எழுத்தாளர் ஒருவரின் ஆய்வினை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டாம் என ஸ்ரீலங்கா அரசு பணித்துள்ளது.

யானைகளை பிடிப்பதற்காக புராதன முறைகளை கையாண்டு இவர் மூன்று பெண்யானைகளை கொன்றுவிட்டதாக அரசு குற்றஞ்சாட்டியுள்ளது. இவரது ஆய்வுக்கு அனுமதியளித்த மூன்று வனபரிபாலன அதிகாரிகளும் வேலைநீக்கஞ்செய்யப்பட்டுள்ளனர்.

எனினும் இந்த பிரிட்டிஷ் எழுத்தாளர் தாம் யானைகளை கொல்லவில்லை எனவும். யானைகளை பாதுகாக்கவென தாம் வெளிநாடுகளில் நிதி திரட்டியதாகவும் கூறியுள்ளார்'

## 'மலர்க்கண்காட்சி மகாமகமாகக்கூடாது'

ஊட்டியில் நடைபெற்ற மலர்க் கண்காட்சியில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கலந்து கொண்டது பற்றி தமிழக வார இதழ் ஒன்றிற்கு அதன் வாசகர் ஒருவர் எழுதியுள்ள கடிதத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

'இந்த ஊட்டி மலர்க் கண்காட்சி மகாமக கண்காட்சியாக இல்லாமலிருந்தாலே போதும்,

## லெபனானில் மோதல்

தென் லெபனானின் பாதுகாப்பு எல்லையையும் தாண்டி இஸ்ரேலிய இராணுவ கவசவாகனங்கள் சென்று ஈரான் சார்பு ஹிஸ்புல்லா மூஸ்லிம் தீவிரவாதிகளுடன் தற்போது போரிலீடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மூன்று வார காலமாக நடைபெறும் இப்போரில் அண்மையில் இஸ்ரேலியரோந்து அணியொன்று தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்கானது,

## ★ கொக்கட்டிச் சோலையில் படுகொலை நடந்து ஒரு வருடம் இதுவரை நட்ட ஈடு இல்லை

கொக்கட்டிச் சோலையில் இராணுவம் நடத்திய வெறியாட்டத்தில் 150 க்கும் மேற்பட்ட தமிழர்கள் பலியான சம்பவம் நடைபெற்று ஒருவருடம் பூர்த்தியாகியுள்ளது.

எனினும் இந்த படுகொலையினால் உறவினர்களை இழந்த குடும்பங்களுக்கு இதுவரையில் எந்த விதமான நஷ்டஈடும் அரசினால் வழங்கப்படவில்லை.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்ட ஈடாக ஒரு லட்சம் ரூபா பணம் வழங்கப்பட வேண்டும் என இக்கொலை குறித்து விசாரணை மேற்கொண்ட நீதிபதி ஜெயலத் விசாரணைக்குழு ஸ்ரீலங்கா அரசுக்கு சிபாரிசு செய்திருந்தது.

எனினும் இதுவரை அம்மக்கள் எந்தவித நட்ட ஈட்டையோ நிவாரணத்தையோ பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது,

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் ஜங்ஷன் கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 13-06-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது